Registered as a Newspaper

# உதயன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# HUTCH

## பேச்சு சுதந்திரம்

## மாதம் முழுவதற்கும் ரூ.67/-



½ இறாத்தல் பாணை விட குறைவான விலையில்
மாதம் முழுவதும் Unlimited Free Calls

### எல்லையற்ற HUTCH - HUTCH இலவச அழைப்புகள்

| ரீலோட் | HUTCH - HUTCH | எந்த வலையமைப்பிற்குமான அழைப்பு | நாட்கள் |
|---|---|---|---|
| ரூ.67/- | எல்லையற்ற இலவச அழைப்புகள் | 50 நிமிடங்கள் | 30 |
| ரூ.123/- | எல்லையற்ற இலவச அழைப்புகள் | 75 நிமிடங்கள் | 60 |
| ரூ.147/- | எல்லையற்ற இலவச அழைப்புகள் | 100 நிமிடங்கள் | 90 |

TRC/H/PRO/23/01

முற்கொடுப்பனவு மற்றும் பிற்கொடுப்பனவு இணைப்புகளுக்கு

072 மற்றும் 078 இலக்கங்களில் தொடங்கும் தொலைபேசி இலக்கங்கள் அனைத்தும் HUTCH வலையமைப்பிற்கு உரியவையாகும்.

செயற்படுத்த: RELOAD, HUTCH APP, USSD [illegible]

HUTCH

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமராட்சிக்கான
உதயன்
கிளைக் காரியாலயம் தற்போது
மாலுசந்தி அல்வாயில்
கிளைப் பணிமனையில் செய்திகள் மற்றும் விளம்பரங்களை காலை 08.30 முதல் இரவு 10.00 மணிவரை கையளிக்கலாம்.
T.P: 021 4927 454, 077 120 9996

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 50
பக்கங்கள் 12

சுடர் : 38
கதிர் : 70

04 சனிக்கிழமை பெப்ரவரி 2023

தை 21 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

# தமிழர்களுக்கு நீதிகோரும் பேரணி இன்று ஆரம்பம்!

## அணிதிரள மாணவர்கள் அழைப்பு
## ஹர்த்தாலால் முடங்குகிறது வடக்கு

யாழ்ப்பாணம், பெப்ரவரி 4

சிறிலங்கா அரசு தமிழ் மக்கள் மீது தொடர்ச்சியாக மேற்கொண்டுவரும் ஆக்கிரமிப்புக்கள், அடக்குமுறைகளை எதிர்த்தும், ஆக்கிரமிப்பு சிங்கள இராணுவம் எமது மண்ணிலிருந்து வெளியேற வேண்டும் என்பதை வலியுறுத்தியும், தமிழ்த் தேசிய இனத்தின் பிறப்புரிமையான சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தியும் பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் எழுச்சிப் பேரணி தமிழர் தாயகத்தில் இன்று ஆரம்பமாகவுள்ளது.

11 >

## நகைக்கடை உரிமையாளர் சடலமாக மீட்பு

முல்லைத்தீவு, பெப். 4

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்புப் பகுதியில் நகைக்கடை உரிமையாளர் ஒருவர் நேற்றுக்காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார். பழனிநாதன் நெடுஞ்செழியன் (வயது- 53) என்பவரே சடலமாக

11 >

## பல்கலை மாணவர்களின் பேரணிக்கு அணிதிரள்க!

### சிறீதரன் எம்.பி. வலியுறுத்து

யாழ்ப்பாணம். பெப். 4

சிறிலங்காவின் சுதந்திரதினமான இன்றைய தினத்தை கறுப்பு நாளாகவும், ஹர்த்தாலாகவும் அறிவித்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாண

11 >

### பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின்

## 2 உறுப்பினர்கள் பதவிவிலகினர்!

கொழும்பு, பெப். 4

பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் இருவர், உடனடியாக

11 >

## ஹர்த்தாலும் பேரணியும் வெற்றிபெற ஒன்றிணைக

### நாடாளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரன் அழைப்பு

யாழ்ப்பாணம், பெப். 4

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாண வர்களாலும், கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்க

11 >



## வலி.வடக்கில் நேற்று 108 ஏக்கர் விடுவிப்பு!

யாழ்ப்பாணம், பெப். 4

யாழ்ப்பாணம் வலி.வடக்கில் பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டில் இருந்த 108 ஏக்கர் காணிகள் நேற்று விடுவிக்கப்பட்டு, அவை அவற்றின் உரிமையாளர்

11 >

### வலி. வடக்கில்

## விடுவிக்கப்பட்டுள்ள பகுதிகளில் திருடர்கள் நேற்றுக் கைவரிசை!

யாழ்ப்பாணம், பெப். 4

பலாலி வடக்கில் நேற்று 108 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டு, அவை பொதுமக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில், விடுவிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள

12 >

## சுதந்திரதினத்துக்கு எதிராக மருதானையில் போராட்டம்!

தடியடி, கண்ணீர்ப்புகை வீசி பொலிஸார் அராஜகச் செயல்

10 >

## காலிமுகத்திடலில் நுழைய 27 தனிநபர்களுக்குத் தடை

### கண்காணிப்பு அதியுச்சம்

கொழும்பு, பெப். 4

சிறிலங்காவின் சுதந்திரதினத்தை முன்னிட்டு காலிமுகத்திடலில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. சுதந்திரதின நிகழ்வுகள் இடம்பெறும் அந்தப்

11 >

### யாழ். மாவட்டத்தில் இடம்பெறும்

## சுதந்திரதின நிகழ்வில் கலாசாரப் பேரணி

யாழ்ப்பாணம், பெப். 4

யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ள தேசிய சுதந்திரதின நிகழ்வில் ஐந்து மாவட்டங்களின் கலாசாரங்களை உள்ளடக்கிய வாகனப் பேரணியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகத்தின்

11 >

## பலாலி கிழக்குப் பகுதி விரைவில் விடுவிப்பு!

### யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 4

வலி. வடக்கிலுள்ள பலாலி கிழக்குப் பகுதி (இராணுவ முகாமுக்கு எதிர்ப்புறப் பகுதி) விரைவில் விடுவிக்கப்படும் என்று யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி தெரிவித்தார்.

வலி. வடக்கில் 108 ஏக்கர் நிலப்பகுதி பொதுமக்களின் பாவனைக்காக நேற்று விடுவிக்

11 >

### வடக்கில் கனமழையால்

## ஆயிரக்கணக்கான ஏக்கர் நெற்செய்கை அழிவு

### விவசாயிகள் பெருங்கவலை



முல்லைத்தீவு, பெப். 4

வடமாகாணத்தில் கடந்த இரு நாள்களாகக் கொட்டித் தீர்த்த கனமழையால், பலநூறு ஏக்கர் பரப்பில் செய்கைபண்ணப்பட்ட நெற்பயிர்கள் அழிவடைந்துள்ளன என்று விவசாயிகள்

11 >



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தேர்தல் செலவு

# பொய்த் தகவல் வழங்கினால் உறுப்பினர் பதவி பறிபோகும்!

## தேர்தல்கள் ஆணையாளர் சமன் சிறிரத்நாயக்க எச்சரிக்கை



கொழும்பு, பெப். 4

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் போட்டியிடும் சுயேச்சை வேட்பாளர், வாக்காளர் ஒருவருக்கு 20 ரூபாவும், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி ஒரு தேர்தல் தொகுதியின் மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கையை 20 ரூபாவால் பெருக்கி வரும் தொகையில் 60 சதவீதத்தையும் செலவிட வேண்டும். தேர்தல் முடிவடைந்து 21 நாள்களுக்குள் வேட்பாளர்கள் அனைவரும் தேர்தலுக்கு செலவு செய்த நிதி தொடர்பான தகவல்களை தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு சமர்ப்பிக்க வேண்டும் என தேர்தல்கள் ஆணையாளர் சமன் சிறிரத்நாயக்க தெரிவித்தார்.

பொய்யான தகவல்கள் சமர்ப்பிக்கப்படு மாயின் தேர்தலில் வெற்றி பெற்றவரின் அரசியல் பதவி இரத்துச் செய்யப்படும் என்றும் தோல்வியடைந்தவர் மூன்று ஆண்டுகளுக்கு தேர்தலில் போட்டியிட தடை விதிக்கப்படும் எனவும் குறிப் பிட்டார்.

தேர்தல் செலவீனம் ஒழுங்குப்படுத்தல் சட்டம் தொர்பில் அவர் மேலும் குறிப் பிட்டதாவது:-

1974 ஆம் ஆண்டுக்கு முன்னர் தேர் தல் செலவுகளை கண்காணிக்கும் வழிமுறை காணப்பட்டது. தேர்தல் முறைமை திருத்தம் செய்யப்பட்டதை தொடர்ந்து வேட்பாளர் ஒருவர் தேர்தல் வெற்றிக்காக எவ்வளவு செலவு செய் யலாம் என்ற நிலை காணப்பட்டது.

விருப்பு வாக்கு முறைமை தேர்தல் செலவுகளையும், அரசியல் கட்சிகளுக் கும் இடையில் முரண்பாடுகளை தோற் றுவித்துள்ளது.

விருப்பு வாக்கு முறைமையைக் கொண்டு ஒரு வேட்பாளர் அதிக நிதியை தேர்தலுக்காக செலவு செய்கிறார். இத னால் முறையற்ற அரசியல் நிர்வாக கட்டமைப்பு தோற்றம் பெறும். தேர்தல் செலவுகளை ஒழுங்குபடுத்தும் வகை யில் சட்டம் உருவாக்கப்பட வேண்டும் என சகல தரப்பினரும் வலியுறுத்தினர்.

தேர்தல் செலவீனம் ஒழுங்குபடுத்தல் தொடர்பான சட்ட வரைவு 2019 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு அதற்கு அமைச்சரவை இருமுறை அனுமதி வழங்கியது. இருப்பினும் பல்வேறு கார ணிகளால் நிறைவேற்றப்படவில்லை.

அரசியல் நிலைமை குறித்து நாட்டு மக்கள் முழுமையாக கவனம் செலுத்தி யுள்ள பின்னணியில் குறுகிய காலத்துக் குள் தேர்தல் செலவீனம் ஒழுங்குபடுத் தல் சட்டம் கடந்த மாதம் 19 ஆம் திகதி நிறைவேற்றப்பட்டது.

தேர்தல் செலவீனம் ஒழுங்குபடுத்தல் சட் டம் உருவாக்கப்பட்டு ஐந்து நாள்களுக் குள் தேர்தல் செலவுகள் தொடர்பான தீர் மானத்தை தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானிக்கவேண்டும் என்ற திருத்தம் சட்டத்தில் உள்வாங்கப்பட்டது.

இதற்கமைய கடந்த மாதம் 24ஆம் திகதி 25 தேர்தல் நிர்வாக மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்கள் 339 சுயேச்சை வேட்பாளர்களின் பிரதிநிதிக ளுடன் பேச்சுக்களை மேற்கொண்டனர். அன்றைய தினம் ஏற்றுக்கொள்ளப்பட்ட 58 அரசியல் கட்சிகளின் செயலர்களு டன் தேர்தல் தலைமையகத்தில் விசேட பேச்சு இடம்பெற்றது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் வேட் பாளர் ஒருவர் வாக்காளர் ஒருவருக்கு 300 ரூபா செலவு செய்ய வேண்டும் என ஆரம்பத்தில் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு ஆணைக்குழு அனுமதி வழங்கவில்லை.

பல்வேறு கட்ட பேச்சுக்களைத் தொடர்ந்து வேட்பாளர் ஒருவர் வாக்கா ளர் ஒருவருக்கு 15 ரூபா செலவு செய்ய அரசியல் கட்சிகளின் செயலர்கள் இணக்கம் தெரிவித்தனர். இந்தத் தீர் மானத்தை ஆணைக்குழு பரிசீலனை செய்து அந்தத் தொகையை 20 ரூபா வாக நிர்ணயித்தது. இதற்கமைய ஒரு சுயேச்சை வேட்பாளர் வாக்காளருக்கு 20 ரூபா செலவு செய்யவேண்டும். அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி ஒரு தேர்தல் தொகுதியில் உள்ள மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கையை 20 ரூபாவால் பெருக்கி, வரும் தொகையில் 60 சதவீதத்தை அந்த தேர்தல் தொகு திக்காக செலவு செய்ய வேண்டும் என அறிவிக்கப்பட்டது.

தேர்தலில் போட்டியிட்ட அனைத்து வேட்பாளர்களும் தேர்தல் பெறுபேறு வெளியாகி 21 நாள்களுக்குள் மாவட் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர்களி டம் தேர்தலுக்கு செலவான நிதி மற்றும் அந்த நிதியை திரட்டிக் கொண்ட விதம் தொடர்பான தெளிவான ஆவணங் களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

வேட்பாளர்களால் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள் பகிரங்கப்படுத்தப்படும். குறித்த தகவல்களை இலங்கை பிர ஜைகள் அனைவரும் பெற்றுக்கொள்ள முடியும். வேட்பாளர் ஒருவருக்கு அவரது அனுசரனையாளர்கள் செலவு செய் யும் நிதி தொடர்பில் குறித்த வேட்பாளர் பொறுப்புக் கூறவேண்டும்.

பொய்யான ஆவணங்களைச் சமர்ப்பித் தால் தேர்தலில் வெற்றி பெற்றவரின் அரசியல் பதவி பறிக்கப்படும். அத்து டன் தேர்தலில் போட்டியிட்டு தோல்வி யடைந்த ஒருவர் செலவு தொடர்பில் பொய்யான ஆவணங்களை சமர்ப் பித்திருந்தால் அவர் மூன்று வருடங்க ளுக்கு எந்தத் தேர்தலிலும் போட்டியிட தடை விதிக்கப்படும்.

போட்டியிடும் அனைத்து வேட்பாளர் களும் தேர்தலுக்காக செலவு செய்யும் நிதி, பரப்புரை நடவடிக்கைகள் கண்கா ணிக்கப்படும். சமர்ப்பிக்கப்படும் ஆவ ணங்கள் அங்கீகரிக்கப்பட்ட தனியார் கணக்காய்வு தரப்பினர் ஊடாக பரிசீ லனை செய்யப்படும் - என்றார். (ஒ-இ)

# இலங்கையின் வளர்ச்சியில் நேர்மையை வெளிக்காட்டுக!

## அமெரிக்க இராஜதந்திரியின் கருத்துக்கு சீனா பதிலடி

கொழும்பு, பெப். 4

இலங்கை எதிர்கொள்ளும் சிரமங்களை யும் சவால்களையும் உன்னிப்பாக கவ னித்து பொருளாதார வளர்ச்சிக்கு சீனா சிறந்த முறையில் கைகொடுக்கின்றது. அமெரிக்கா இலங்கைக்கு ஏதாவது செய்ய வேண்டுமானால் தமது நேர்மையை வெளிக்காட்டவேண்டும்.

சீனா தொடர்பில் அமெரிக்காவின் அரசி யல் விவகாரங்களுக்கான துணை இரா ஜாங்கச் செயலாளர் நுலாண்ட் வெளியிட்ட கருத்துக்கு சீனா இவ்வாறு பதிலடி வழங் கியுள்ளது.

இதுதொடர்பில் சீன வெளியுறவு அமைச் சக பேச்சாளர் மாவோ நிங் மேலும் கூறு கையில்,

இலங்கைக்கான கடன் நிவாரணத்துக் காக சர்வதேச நாணய நிதிய நிபந்தனை விடயத்தில் சீனா காட்டியுள்ள முனைப்பு போதாது என்று நுலாண்ட் தெரிவித்தி ருந்தார்.

அமெரிக்கா உண்மையில் இலங்கைக்கு ஏதாவது செய்ய வேண்டுமானால் தமது நேர்மையைக் காட்டவேண்டும்.

சீனாவின் ஏற்றுமதி - இறக்குமதி வங்கி ஏற்கனவே இலங்கைக்கு ஆதரவை தெரிவித்துள்ளது. இலங்கையும் அதற்கு சாதகமாக பதிலளித்துள்ளது.

உண்மையான நண்பன் என்ற வகை யில் இலங்கை எதிர்கொள்ளும் சிரமங்க ளையும் சவால்களையும் உன்னிப்பாகக் கவனித்து பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சிக்கு சீனா சிறந்த முறையில் பங் காற்றுகிறது - என்றார். (ச-இ)

# எரிபொருள்களில் அதிக வருவாய் எதற்கு பெற்றோல் விலை உயர்வு?

## ஐக்கிய ஒன்றிய தொழிற்சங்க கூட்டமைப்பு கேள்வி

கொழும்பு, பெப்.4

எரிபொருள்கள் விற்பனையின் மூலம் அரசாங்கம் அதிக வரு வாயை ஈட்டிக்கொள்ளும் நிலை யில் பெற்றோல் விலை ஏற்றத்துக் கான காரணம் என்னவென்பதை தெரியப்படுத்த வேண்டும்.

இவ்வாறு ஐக்கிய ஒன்றிய தொழிற் சங்கக் கூட்டமைப்பின் அழைப் பாளர் ஆனந்த பாலி ஊடகங்க ளுக்கு கருத்து தெரிவிக்கையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், விலைச்சூத்திரத்துக்கமைய எரி பொருள்களின் விலை உயர்த் தப்பட்டிருந்தால் பெற்றோலின் விலை மட்டுமன்றி ஏனையவற் றின் விலைகளும் உயர்த்தப்பட்டி ருக்க வேண்டும்.

எரிபொருள்கள் விற்பனையின் ஊடாக 8 பில்லியன் ரூபா லாபமீட் டும் இலங்கை பெற்றோலிய வளக் கூட்டுத்தாபனம் கடந்த டிசெம்பர் மாதம் 200 கோடி ரூபாவை ஊழி யர்களுக்கு போனஸ் வழங்கியுள் ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

பெற்றோலிய வளக்கூட்டுத்தா பனம் வங்கிகளுக்குச் செலுத்த வேண்டிய வட்டித் தொகையை ஈடு கட்ட எரிபொருள்கள் மீது வரியை சுமத்தி அந்தச் சுமையை மக்கள் மீது திணிக்கின்றது. பெற்றோல் விலை ஏற்றத்துக்கான உண்மைக் காரணத்தை மக்களுக்கு அம்பலப் படுத்த வேண்டும் - என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ஸ்கந்தஹம - நேஸ்ஹம - அஞ்சாஹம

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## தமிழரசின் தனி ஆவர்த்தனம்

இன்று இலங்கையின் 75 ஆவது சுதந்திர நாள். வழமை போன்று தமிழர்கள் இன்றைய நாளைக் கரிநாளாகவே கடைப் பிடிக்கின்றனர். அதேவேளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் மற்றும் வடக்கு – கிழக்கு பல்கலைக்கழக மாணவர் சமூகம் என்பன இணைந்து கரிநாளை முன்னிட்டு வடக்கிலிருந்து கிழக்கு நோக்கிய மாபெரும் பேரணியையும் ஒழுங்கமைத்துள்ளன. இவை எல்லாற்றுக்கும் மேலாக தமிழ் மக்களின் ஒருங்கிணைந்த எதிர்ப்பை வெளிக்காட்டுவதற்காக, தமிழ் மக்கள் தங்களையே வருத்தி இன்று முழு அடைப்புப் போராட்டத்தை நடத்தவுள்ளனர்.

தமிழர்களின் மரபணுவில் ஒட்டிவிட்டதைப்போன்ற 'ஒற்றுமையீனம்' என்கின்ற வியாதியும் இந்தப் போராட்டங்களின் போது தலை எடுக்கத்தான் செய்கின்றது. தமிழ்த் தேசியத் தரப்புக்கள் அனைத்தும் ஓரணியில் நின்றாலும் எப்போதுமே தங்களைத் தனித்துவமானவர்கள் – புனிதமானவர்கள் என்பதைக் காட்டுவதற்காக அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் என்னும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தனிவழியமைத்துக்கொள்வது எல்லோரும் எடுக்கும் முடிவுக்கு எதிர்மாறான முடிவெடுப்பது வழமை. அந்தப் பரவணிப் பழக்கத்தில், பல்கலைக்கழக மாணவர் பேரணியில் பங்கேற்பதற்கு நிபந்தனை விதித்து, தங்கள் ஆதரவின்மையை வேறு வடிவில் வெளிக்காட்டியிருக்கின்றனர் அவர்கள். இதுவொன்றும் புதிதல்ல. 13 ஆவது திருத்தம் – ஒற்றையாட்சியை நிராகரிப்பதை பல்கலைக்கழக மாணவர்கள் பகிரங்கமாக அறிவிக்கவேண்டும் என்பது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நிலைப்பாடு. அதனை ஏற்றுக்கொண்டோம் என்று பல்கலைக்கழக மாணவர்கள் எங்கும் சொல்லவில்லை. அவ்வாறிருக்க அதனை நிராகரிக்கின்றோம் என்று பல்கலைக்கழக மாணவர்கள் சொல்லவேண்டும் என்று முன்னணி ஏன் எதிர்பார்க்கின்றது என்பதைப் புரிந்துகொள்ளவே முடியவில்லை. ஒரு வேளை, இந்தப் பேரணியில் பங்கேற்றால் தாமும் பத்தோடு பதினொன்றாகி விடுவோம் என்பதால் அதனைப் புறக்கணிப்பதற்கு அவர்கள் தேடிப்பிடித்த காரணம் தான் இந்தப் 'பதின்மூன்று' விவகாரமோ? என்றே நினைக்கத்தோன்றுகின்றது.

இவை எல்லாவற்றுக்கும் அப்பால் நடப்பு உள்ளூராட்சித் தேர்தலில் தமிழர் தரப்பின் ஒற்றுமைச் சின்னமாக விளங்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து – வெளியேறி – அதனை உடைத்து தனிவழியில் தேர்தலை எதிர்கொள்ளும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி மட்டக்களப்பு மாவட்டத்தில் இன்று கரிநாள் போராட்டத்தை நடத்துகின்றது.

பல்கலைக்கழக மாணவர்களின் பேரணியில் பங்கேற்காமல் ஒற்றுமையின்மையை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எப்படி வெளிப்படுத்துகின்றதோ அதேபோன்று இம்முறை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியும், பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டத்தை பலவீனப்படுத்தும் வகையில் அல்லது அதற்கு இடையூறு விளைவிக்கும் வகையில் மட்டக்களப்பில் இன்று தனி ஆவர்த்தனம் வாசிக்கின்றது. ஏற்கனவே உள்ளூராட்சித் தேர்தலை தனித்து எதிர்கொள்வதால் பின்னடைவுகளைச் சந்தித்துள்ள இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, அரசாங்கத்துக்கு எதிரான தனித்துவப் போராட்டங்களால் மக்கள் மனங்களை வெல்லலாம் என்று தப்புக்கணக்குப் போட்டிருக்கின்றது.


இலங்கையின் சுதந்திர தின வரலாற்றில் 1972 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அதாவது இலங்கை குடியரசாகிய பின்னர் நடைபெற்ற எந்தவொரு சுதந்திர தினக் கொண்டாட்டங்களிலும் தமிழ்த் தேசியத் தலைவர்கள் பங்கேற்றதில்லை. ஆனால் அந்தச் சாதனையை முறியடிக்கும் வகையில் 43 ஆண்டுகளின் பின்னர் அதாவது 2015ஆம் ஆண்டு தேசிய சுதந்திர தினக் கொண்டாட்டத்தில் தமிழ் அரசுக் கட்சி பங்கேற்றது. அந்தக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தனும், அந்தக் கட்சியின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தமது பாரியார் சகிதம் பங்கேற்றனர். நல்லாட்சி அரசின் காலத்தில் அவர்கள் இருவரதும் இந்தப் போக்கு தொடர்ந்தது.

தமிழ் அரசுக் கட்சியின் தலைவர்கள் சிங்களத் தலைவர்களோடு சுதந்திர நாளில் கொஞ்சிக் குலாவியபோதும் தமிழர்கள் இலங்கையின் சுதந்திர நாளை கரிநாளாகவே கடைப்பிடித்துக்கொண்டிருந்தனர். தமிழர்கள் அப்படி கரிநாளாகக் கடைப்பிடிப்பதை ஏளனம் செய்தவர்கள் இந்தத் தமிழ் அரசுத் தலைவர்கள். இப்போது அதே தமிழ் அரசுத் தலைவர்களே கரிநாள் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்திருக்கின்றார்கள். இதுவெறும் தேர்தல் 'சுத்துமாத்து' என்பதை மக்கள் ஒன்றும் அறியாதவர்கள் அல்லர்.

### நாளொரு நல்வார்த்தை

"செயலை விதையுங்கள் பழக்கம் உருவாகும்; பழக்கத்தை விதையுங்கள்; பண்பு உருவாகும் பண்பை விதையுங்கள்; எதிர்காலம் உருவாகும்"

ஜேம்ஸ் ஆலன்




பிரதேசசபைக் காணியை

# படைகளுக்கு தாரைவார்த்தது வலி.கிழக்கு பிரதேசசெயலகம்

யாழ்ப்பாணம், பெப். 4

வலிகாமம் கிழக்குப் பிரதேசசபைக்குரித்தான அக்கரை சுற்றுலா மையத்தில் கடற்படையினருக்கு காணி ஒதுக்கப்பட்டுள்ளதாக வலிகாமம் கிழக்குப் பிரதேசசெயலகம் கடிதம் மூலம் பிரதேசசபைக்கு அறிவித்துள்ளது. அக் கடிதத்தில், இடைக்காடு கிராம அலுவலர் பிரிவில் உள்ள அக்கரை பிரதேசத்தில் கடற்படை கண்காணிப்பு மையத்தை நிறுவுவதற்கு கடற்படையினர் பிரதேச செயலகத்திடம் 20 பேர்ச் காணியை கோரியுள்ளனர்.

அதற்கமைய கடற்படை மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் தங்களால் சுற்றுலா வலயமாக ஆட்சிப்படுத்தியுள்ள காணியில் இரண்டு பரப்பை கடற்படை கண்காணிப்பகம் அமைக்க வழங்குவதாகவும் பிரதேசசெயலகம் பிரதேசசபைக்கு கடிதம் மூலம் இவ்வாரம் அறிவித்துள்ளது.

இந்த அறிவிப்பைத் தொடர்ந்து பிரதேசசபையின் நிறைவேற்று அதிகாரியான தவிசாளர் தி.நிரோஷ் உள்ளூராட்சி மன்றங்களுக்குரிய முடிவுகள் தொடர்பாக தவிசாளர் என்ற முறையில் சபையின் நிறைவேற்று அதிகாரியான தனக்கே அதிகாரம் உண்டு என்பதை பிரதேச செயலருக்கு சுட்டிக்காட்டியுள்ளதுடன், எது எப்படியிருந்த போதும் படைத்தரப்புக்கு காணியை வழங்க முடியாது எனவும் பிரதேசசெயலகத்தால் கடற்படையினருக்கு காணி வழங்க எடுக்கப்பட்டுள்ள முடிவை உடனடியாக நிறுத்துமாறும் பிரதேசசெயலருக்கு கடிதம் ஊடாக அறிவித்துள்ளார்.

இந்தக் கடிதத்தின் பிரதிகள் ஆளுநர், மாவட்டச் செயலர், மாகாண காணி ஆணையாளர் ஆகியோருக்கும் பிரதியிடப்பட்டுள்ளது.

கடற்படைக்கு வழங்குவதற்கு அடையாளப்படுத்தப்படும் காணி பிரதேசசபையால் காலாகாலமாக சுற்றுலாத்துறைக்கு என மில்லியன் கணக்கில் முதலீடு செய்யப்பட்டு எல்லைப்படுத்தப்பட்டுள்ளது. சுற்றுலா மையம் மற்றும் சிறுவர் பூங்காவை உள்ளடக்கிய கடற்கரையாக மக்கள் பாவனையில் உள்ளது. அவ்வாறான பிரதேசத்தில் பிரதேசசபையின் நிறைவேற்று அதிகாரியான தனக்கோ அல்லது பிரதேசசபைக்கோ எதுவித அறிவிப்புக்களும் இன்றி வெளிப்படைத் தன்மையற்ற முறையில் கிராமஅலுவலர், கடற்படையினர் ஆகியோர் சென்று இரகசியமாக காணியை பார்வையிட்டுள்ளனர். இது அரசநிர்வாகத்துக்கு இருக்கவேண்டிய வெளிப்படைத்தன்மையையும் கேள்விக்குள்ளாக்கியுள்ளது என்று தவிசாளர் நிரோஷ் குறிப்பிட்டுள்ளார். (ஒ-இ)

## சுதந்திரதின நிகழ்வை புறக்கணித்தார் சஜித்

இலங்கையின் 75ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டத்தில் பங்கேற்கப்போவதில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அறிவித்துள்ளார்.

இது குறித்து ஊடகங்களுக்கு அவர் தெரிவிக்கையில், நாட்டில் மனித உரிமைகள் மதிக்கப்படுவதில்லை. நாட்டு மக்கள் படும் துயரங்களைப் பற்றிய சிந்தனை ஆளும் தரப்புக்கு இல்லை.

ஆயினும் அரசாங்கம் 200 மில்லியன் ரூபா செலவில் சுதந்திரதின நிகழ்வை கொண்டாடவுள்ளது. இந்த நிகழ்வில் நாம் பங்கேற்கப் போவதில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டார். (ச-இ)

**நாளை** 05.02.2023 ஞாயிற்றுக்கிழமை — தை 22

சுபநேரம் : 09.35 - 11.05
ராகுகாலம் : 05.05 - 06.35

தைப்பூசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நிலாவரை கிணற்றுப் பகுதியில் அகழ்வு

# சட்டமா அதிபர் ஆலோசனையை உடன்பெறுமாறு மன்று கட்டளை

யாழ்ப்பாணம், பெப்.4

நிலாவரைக் கிணற்று பகுதியில் தொல்லியல் திணைக்களம் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்குத் தடை ஏற்படுத்தினார் என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை தவிசாளர் தியாகராஜா நிரோஷுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெறுவதற்கான ஆவணத்தை இந்த மாத இறுதிக்குள் தயார் செய்து மன்றில் சமர்ப்பிக்கவேண்டும் என்று அச்சுவேலிப் பொலிஸாருக்கு மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை மல்லாகம் நீதிமன்றில் இதுதொடர்பான வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, வழக்கை முன்கொண்டு செல்வதற்கு சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு ஏன் அனுப்பப்படவில்லை என பொலிஸாரிடம் நீதி பதி வினவியதுடன் இந்த மாதத்துக்குள் சட்டமா அதிபரின் ஆலோசனைக்கான ஆவணத்தை தயார் செய்யவேண்டும் என்றும் கட்டளையிட்டார்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் இராணுவத்தினரும் தொல்லியல் திணைக்களமும் இணைந்து நிலாவரைக் கிணறு அமைந்துள்ள வளாகத்தில் சந்தேகத்துக்கு இடமான முறையில் அத்திபாரம் போன்று வெட்டுவதற்கு இரண்டு தடவைகள் முயற்சித்த நிலையில் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் உள்ளிட்டவர்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். எதிர்ப்புக்களை அடுத்து அங்கு தொல்லியல் திணைக்களத்தின் முயற்சிகள் கைவிடப்பட்டன.

பின்னர் வலிகாமம் கிழக்குப் பிரதேசசபைத் தவிசாளர் அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டு தவிசாளருக்கு தொல்லியல் திணைக்களத்தின் கருமங்கள் தொடர்பில் கவனம் செலுத்துவதற்கு அதிகாரம் இல்லை என்று பொலிஸ் அதிகாரிகளால் கூறப்பட்டது. அதேநேரம், பெருந்தொகை இளைஞர்களை கூட்டிவந்து தமது அரச கருமத்துக்குத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் உள்ளிட்டவர்கள் தடை ஏற்படுத்தினர் எனத் தெரிவித்து மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. கடந்த இரண்டு வருடங்களாக இந்த வழக்கு நடைபெற்று வருகின்றது. (எ-இ)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். சிலருக்கு திடீர் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிர்பார்த்த செய்தி கிடைக்கும். மகிழ்ச்சி உண்டாகும். விற்பனை அதிகரிக்கும்.

**இடபம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரிக்கும். தேவையான பணம் கையில் இருப்பதால், உற்சாகமாகச் சமாளித்து விடுவீர்கள். எதிர்பார்த்த காரியம் நல்லபடி முடியும்.

**மிதுனம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. ஆதாயம் கிடைக்கும். வீண்செலவுகள் ஏற்படும். மகிழ்ச்சி உண்டாகும். இழுபறியாக இருந்த காரியம் அனுகூலமாகும்.

**கடகம்:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். கலகலப்பான சூழ்நிலை ஏற்படும். நன்மை உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**சிம்மம்:** தேவையான பணம் கையில் இருக்கும். காரியங்கள் முடிவதில் தாமதம் ஏற்பட்டாலும் முடித்துவிடுவீர்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மகிழ்ச்சி தரும் தகவல் கிடைக்கும்.

**கன்னி:** குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். முக்கியமான முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது.

**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**விருச்சிகம்:** காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் முடிந்துவிடும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். திடீர் செலவுகளால் கையிருப்புக் கரையும். மகிழ்ச்சி ஏற்படும்.

**மகரம்:** எதிர்பாராத வாய்ப்புகள் ஏற்படும். சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**கும்பம்:** தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சில வேலைகளை எடுத்துச் செய்யவேண்டி வரும். தெய்வப் பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும். சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்கள் வகையில் சிற்சில சங்கடங்களைச் சமாளிக்கவேண்டி வரும்.

### மதுவிற்பனை நிலையத்தை அகற்றுக

# தனிநபரால் முன்னெடுக்கப்பட்ட உணவு தவிர்ப்பு கைவிடப்பட்டது

கிளிநொச்சி, பெப். 4

கிளிநொச்சி அக்கராயன் மேற்கில் அமைந்துள்ள விருந்தகத்துடன் கூடிய மதுபான விற்பனை நிலையத்தை இடமாற்றம் செய்யுமாறு கோரி தனிநபரால் முன்னெடுக்கப்பட்ட உணவு தவிர்ப்புப் போராட்டம் நேற்றுமுன்தினம் கைவிடப்பட்டது.

மக்கள் செறிந்து வாழும் பகுதியில் பாடசாலைகள், ஆலயங்கள், முன்பள்ளிகள் உள்ள பகுதியில் மதுவிற்பனை நிலையம் அமைந்துள்ளமையானது சீர்கேடுகளை விளைவிக்கும். மதுவிற்பனை நிலையம் இடமாற்றம் செய்யப்படவேண்டும் எனக் கோரி முருகையா இராசலிங்கம் என்பவர் கடந்த 31ஆம் திகதி முதல் உணவு தவிர்ப்பில் ஈடுபட்டார். போராட்டத்துக்கு பொதுஅமைப்புகளும் மக்களும் ஆதரவளித்தனர்.

இந்நிலையில் கரைச்சிப் பிரதேச செயலாளர், கிளிநொச்சி மதுவரித் திணைக்கள அதிகாரி, அக்கராயன் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோர் நேற்றுமுன்தினம் உணவு தவிர்ப்பில் ஈடுபட்டவரை நேரில் சென்று சந்தித்து, சட்ட ஒழுங்கின்படி உணவுடன் கூடிய மது விற்பனை நிலையத்துக்கான அனுமதி உள்ளது.

இடமாற்றம் தொடர்பில் மாவட்டச் செயலருடன் கலந்துரையாடி மதுவரித் திணைக்கள ஆணையாளர் நாயகத்துக்கு கடிதம் அனுப்புவதற்கான காலஅவகாசம் தாருங்கள்.

மதுவிற்பனை நிலையத்தை இடமாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கின்றோம் எனக் கரைச்சிப் பிரதேச செயலாளர் வாக்குறுதியளித்தார். அதற்கமைய உணவு தவிர்ப்புப் போராட்டம் கைவிடப்பட்டது. (ச-13)

# இன்றைய கரிநாளில் மன்னாரில் போராட்டம்

மன்னார், பெப். 4

இலங்கையின் சுதந்திர தினத்தை பகிஷ்கரித்து அரசாங்கத்தின் அடக்குமுறைக்கு எதிரான கரிநாள் போராட்டத்தில் தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கமும் அணிதிரள அழைப்பு விடுத்துள்ளது.

மன்னார் மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக இன்று சனிக்கிழமை இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெறவுள்ளது.

இலங்கை சுதந்திரம் பெற்று 75 ஆண்டுகளை கடந்த போதும் தமிழினத்துக்கு விடிவு கிடைக்கவில்லை. தமிழினத்தின் கரிநாளாகவே சுதந்திரதினம் இருக்கும்.

இந்த சுதந்திர தினத்தை பகிஷ்கரித்து தமிழர் தேசமாக அணிதிரள்வோம். அடக்குமுறைக்கு எதிராக கிளர்ந்தெழுவோம் என தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கம் அழைப்பு விடுத்துள்ளது. (ச-60)

# நிறுவுநர் தினமும் பரிசளிப்பு நிகழ்வும்

சாவகச்சேரி பெப். 4

மந்துவில் சிறிபாரதி வித்தியாலயத்தின் 93 ஆவது நிறுவுநர் தின நிகழ்வும் பரிசில்நாள் நிகழ்வும் நாளைமறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய கலையரங்கில் நடைபெறவுள்ளது.

அதிபர் க.சத்தியானந்தன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் அபிராமி இராஜதுரையும் சிறப்பு விருந்தினராக பேராதனைப் பல்கலைக்கழக ஓய்வுநிலை பேராசிரியர் கலாநிதி செ.சிவராஜசிங்கம், மதிப்புறு விருந்தினராக சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை ஓய்வுநிலை ஆசிரியர் க.தவயோகராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ய-9)

# விருது, நூற்கொள்வனவுக்கு விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம், பெப். 4

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடத்தும் 2023ஆம் ஆண்டுக்கான விருதுத் தெரிவுகள் மற்றும் நூற்கொள்வனவு ஆகியவற்றுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அதன்படி கலைக்குரிசில் விருதுத்தெரிவு, இளங்கலைஞர் விருதுத் தெரிவு, சிறந்த நூற்பரிசுத் தெரிவு, நூற்கொள்வனவு ஆகியவற்றுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விருதுக்கு விண்ணப்பிப்பதற்கு ஆர்வமுடையவர்கள் தங்கள் பிரதேச கலாசார உத்தியோகத்தரைத் தொடர்புகொண்டு எதிர்வரும் மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பப்படிவங்களை www.np.gov.lk அல்லது www.edumin.np.gov.lk ஆகிய இணையத் தளங்கள் மூலம் பெற்றுக் கொள்ளலாம். மேலதிக தகவலுக்கு 0212054105 எனும் அலைபேசி இலக்கத்தைத் தொடர்புகொள்ளுமாறு வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் ராஜமல்லிகை சிவசுந்தரசர்மா தெரிவித்துள்ளார். (ஒ-14)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சைவ எழுச்சி விழா இன்று

யாழ்ப்பாணம், பெப். 4

ஸ்ரீ சச்சிதானந்தா சுவாமிகளின் 83ஆவது குருபூசை தினத்தை முன்னிட்டு நடத்தப்படும் சைவ எழுச்சி விழா இன்று சனிக்கிழமை ஸ்ரீ சச்சிதானந்த ஆச்சிரம நூல் நிலையத்தில் சிவஸ்ரீ யோ.குருசாமி தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக சிவபூமி அறக்கட்டளை நிலையத் தலைவர் கலாநிதி செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன், கௌரவ விருந்தினராக கைதடி இலங்கை வங்கி முகாமையாளர் ப.இரமணகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச)


## அறை வாடகைக்கு உண்டு

சுண்டுக்குளி மகளிர் பாடசாலைக்கு அருகாமையில் பாண்டியன்தாழ்வில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. பெண் உத்தியோகத்தர்கள் அல்லது A/L பெண் மாணவர்களுக்கு உகந்தது.

தொடர்பு இலக்கம்:-

பாண்டியன்தாழ்வு, சுண்டுக்குளி. **077 236 5463**

CS 23278 (1-6)



## நயினாதீவு
## ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்
## தைப்பூச விழா 05.02.2023



நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலில் இவ்வருடமும் வழமைபோன்று **"தைப்பூசவிழா"** சிறப்பாக நடைபெறவுள்ளது.

- முற்பகல் 10.00 மணிக்கு - சங்காபிஷேகம்
- நண்பகல் 12.00 மணிக்கு - உச்சிக்காலப்பூசை
- பிற்பகல் 12.30 மணிக்கு - வசந்த மண்டபபூசை
- பிற்பகல் 1.00 மணிக்கு - அம்பாள் மஞ்சத்தில் வீதியுலா.

தைப்பூச நன்னாளில் கோவிலுக்கு வருகைதந்து நாகபூஷணியாளின் நல்லருளைப் பெற்றேகுமாறு அடியார்களை அன்போடு அழைக்கின்றோம்.

**அடியார்களின் நலன்கருதி வழமையான வசதிகள் யாவும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.**

அறங்காவலர்சபை
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்.


(cr.39188) (2.6)


## ஆதனப்பெயர் மாற்றம்

**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை
பட்டின உப அலுவலகம் - மானிப்பாய்.**

**வட்டாரம் : 12**
**வீதி : மூத்ததம்பி ஒழுங்கை**
**ஆதன இல : 19 / 25**

வட்டாரம் 12. மூத்ததம்பி ஒழுங்கை. ஆதன இலக்கம் 19/25 இல் அமைந்துள்ள உறுதியின் பிரகாரம் வட மாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்குப்பகுதி மானிப்பாய் கோவிற்பற்று மானிப்பாயிறை "மண்ணாரெல்லையும் தேவலா தேவன் சீமாவும் வடக்கு குஞ்சன் ஆனைப்பந்தியும்" எனும் பெயருள்ள நிலப்பரப்பு 03 விஸ்தீரணமுள்ள இவ் ஆதனம் நெடும்புலம் சுன்னாகம் கிழக்கு எனும் முகவரியில் வசிக்கும் பேரானந்தம் இன்பராஜாவும் பெண் கலாராணியும் ஆகியவர்களால் இவ் ஆதனத்தின் உரிமையாளர்கள் தாமே என 10721ம் இலக்க 07.11.2015 ஆம் திகதிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் வெளிப்படுத்தியுள்ளார்கள். இவ் ஆதனம் 8768ம் இலக்க 07.12.1992ம் திகதிய உறுதி மூலம் கணபதிப் பிள்ளை பரசுராமர் கைம்பெண் சொர்ணம்மா ஆகியவரால் பேரானந்தம் இன்பராஜாவும் பெண் கலாராணியும் என்பவர்களுக்கு நிபந்தனை அறுதியாக வழங்கப்பட்டுள்ளது. நில அளவையாளர் V.T.பாலசுப்பிரமணியம் அவர்களால் வரையப்பட்ட 7076ம் இலக்க 17.07.2017ம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் "மண்ணா ரெல்லையும் தேவலா தேவன் சீமாவும் வடக்கு குஞ்சன் ஆனைப் பந்தியும்" நிலப்பரப்பு 03 கொண்ட இவ் ஆதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருப்பின் அவ் உரிமையினை உறுதிப் படுத்தும் உறுதிகள். ஆவணங்களுடன் எழுத்து மூலமாக பிரசுரித்த திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அவ்வாறு யாராயினும் எவ் உரிமையும் கோரப் படாதவிடத்து இவ் ஆதனமானது பேரானந்தம் இன்பராஜாவும் பெண் கலாராணியும் என்பவர்கள் பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.




அ.ஜெபநேசன்,
தவிசாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்.

(CS 23268)(3/6)


# அருள் மிகு இணுவில் கந்தசுவாமி கோயில்
# தைப்பூச மஞ்சத்திருவிழா




**காலம் : 05.02.2023 ஞாயிற்றுக்கிழமை**

- காலை : 5.30 மணிக்கு பால்குட பவனி ஆரம்பம் இணுவில் மருதனார் மடம் பல்லப்ப வைரவர் ஆலயத்திலிருந்து .....(பால், குடம், ஆலயத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது)
- இன்று மாலை 6.00மணிக்கு முன் முன்பதிவுகளை மேற்கெள்ளவும்
- காலை : 9.30 மணிக்கு மாபெரும் பொங்கல் ஆரம்பமாகி 2.30 மணிக்கு நிறைவு (பொங்கல் பொருள்கள் அனைத்தும் ஆலயத்தில் உண்டு)
- இரவு: 6.00 மணிக்கு உலகப் பெருமஞ்சத்தில் முருகப்பெருமான் வீதி வலம் வரும் நிகழ்வும், தமிழரின் கலை கலாசார நிகழ்வுகளான கரகம், கம்படி, சிலம்படி, தீப்பந்தம், பொம்மல் ஆட்டம், ஒயிலாட்டம், பறை இசை, உடுக்கிசை, மயிலாட்டம் போன்ற நிகழ்வுகளும் இடம்பெறும்.

**உலகப் பெரும் மஞ்சம் வடம் தொட்டிழுக்க
அனைவரும் வாரீர்**

........... விளம்பர அனுசரணையாளர்கள் ...........

**துரை சிற்பாலயம்**
**தாவடி வடக்கு, இணுவில்.**

**கற்பகன் ஹாட்வெயர்**
**கற்பகப் பிள்ளையார் கோயிலடி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.**

NEW GLOBAL BUSINESS SYSTEMS

Kumarakoddam, Kondavil
0094 21222 7262 / 0094 70505 6666 / 0094 77 7917 748
businessnewglobal@gmail.com newglobal business systems

Distributor ABC TOSHIBA Camelion LONGEN
Magnet Cells (Pvt)Ltd
7, Maya Avenue, Colombo 6, Sri Lanka

Delma
NORTH POWER
CALIN
Delma

Northern Sole Agent: ABC TOSHIBA Camelion LONGEN UNITY OKTAN DP


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெரிக்காவுக்கு ஓடுவார் பஸில்!

விமல் அணி சபதம்

கொழும்பு, பெப். 4 'எங்கள் 'ஹெலிகொப்டர்' கூட்டணியை வீழ்த்துவதற்கான வல்லமை பெரமுனவுக்குக் கிடையாது. தேர்தல் முடிந்த கையோடு அமெரிக்காவுக்கு ஓடவேண்டியநிலை பஸிலுக்கு ஏற்படும்' என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

விமல் அணியின் 'ஹெலிகொப்டர்', ராஜபக்சவின் அரசியல் கோட்டையில் உடைந்து விழும் என பெரமுனவின் செயலாளர் சாகர காரியவசம் அறிவித்திருந்தார். இந்த நிலையில் அவருக்குப் பதிலடி கொடுக்கும் வகையிலேயே விமல் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

(அ-ம-44)


## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



மண்ணில் 21.12.1944

விண்ணில் 06.01.2023

கடந்த (06.01.2023) வெள்ளிக்கிழமை அதிகாலை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் சபாரத்தினம் திருலோகசிங்கம்

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள்" நாளை (05.02. 2023) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மரணச்செய்திகேட்டு எமக்கு பல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும், பதாகைகள், அஞ்சலிகள் அச்சிட்டு வெளியிட்டவர்களுக்கும், மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், நேரிலும் தொலைபேசி மூலமும் ஆறுதல் கூறியவர்களுக்கும், இறுதிச்சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும் உளமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யாமாச் சந்தி, உடுவில் தெற்கு, மானிப்பாய்.

குடும்பத்தினர்.

CS 23280 (1-6)

## நீங்கா நினைவில் ஓராண்டு...



### அமரர் திருமதி யோகேஸ்வரி திருச்செல்வம்

(ஓய்வுபெற்ற இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன கிளை முகாமையாளர் - வவுனியா)

தோற்றம் 10.06.1940

ஆண்டொன்று ஆனாலென்ன
நீண்டு நாட்கள் போனாலென்ன
நீங்காது நினைவிருப்பீர்........

மறைவு 16.01.2022

அன்னாரின் முதலாம் ஆண்டு நினைவுப் பிரார்த்தனை இன்று (04.02.2023) சனிக்கிழமை முற்பகல் எமது இல்லத்தில் நடைபெற விருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சப்பச்சிமாவடி, சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



தோற்றம் 02 • 01 • 1962

மறைவு 02 • 02 • 2023

### செல்வி மகேஸ்வரன் தேவவல்லி

புத்தூர் மேற்கு, புத்தூரினை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி மகேஸ்வரன் தேவவல்லி 02.02.2023 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மகேஸ்வரன் பரமேஸ்வரி தம்பதியரின் அன்புமகளும், கோமளவல்லி, ஆனந்த நடராஜன், ஆனந்த குமாரசுவாமி, கௌரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், தமிழ்ச்செல்வன், கவீந்திரன், விஜி, கௌரி ஆகியோரின் அன்பு மைத்துனியும், சாயிநடராஜனின் சித்தியும், சஜிதா, ஹரிசன் ஆகியோரின் பெரியம்மாவும், வளவன், கலைஞன், இலக்சுமி, ஓவியா ஆகியோரின் அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.02.2023) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, கிந்திட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகேஸ்வரன் ஆனந்த நடராஜன்
(சகோதரன்)
(ஆசிரியர் மாங்குளம் ம.வி)

தொடர்பு: 076 286 1394
077 706 4524

## மரண அறிவித்தல்



தோற்றம் 20 09 1942

மறைவு 02 02 2023

### செல்வவிநாயகம் பத்மநாதன்

தனங்களப்பு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், கச்சாய் வீதி, சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட செல்வவிநாயகம் பத்மநாதன் கடந்த (02.02.2023) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வவிநாயகம் அன்னபூரணம் தம்பதிகளின் அன்புப் புதல்வனும், கந்தையா சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கனகசபாபதி, விநாயகமூர்த்தி, தவமணி, சாரதாதேவி மற்றும் ஞானபூபதி, திருச்செந்தூர்செல்வி, சற்குணானந்தம், சறோஜினிதேவி, சச்சிதானந்தம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், அரியமலரின் மைத்துனரும், காலஞ்சென்ற புவனேஸ்வரி, புவனேஸ்வரி, கார்த்திகேசு, நல்லையா மற்றும் சிவகுருநாதபிள்ளை, சிவராசா, மல்லிகா தேவி, கணேசமூர்த்தி, ரஞ்சினி ஆகியோரின் மைத்துனரும், கணேசலிங்கம் (லண்டன்), முரளிதரன் (லண்டன்), பத்மலிங்கம் (கனடா), பத்மலோசனி (கனடா), காலஞ்சென்ற வேணுதரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சத்தியா (லண்டன்), சுயா (லண்டன்), வாசுகி (கனடா), திருச்செல்வம் (கனடா) ஆகியோரின் மாமனாரும், துகின், துஷான், நிம்சா, நிதுசா, துவாரகன், ரிசானி, மிதுளன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.02.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 305 3058

(CR/ 39192) 4-6

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினைத்திறனற்ற ஊழியர்கள் தாமாக ஓய்வு பெறும் திட்டம்!

## அரசாங்கம் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.4

வினைத்திறன் அற்ற அரச ஊழியர்கள் சுயவிருப்பின்பேரில் ஓய்வு பெறும் திட்டம் அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோது, அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்த்தன இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இந்தத் தீர்மானம் தொடர்பான சுற்றறிக்கை திறைசேரியால் அனைத்து அமைச்சுக்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சுக்களின் செயலாளர்கள் இந்தத் தீர்மானத்தை நடைமுறைப் படுத்தவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார். (ஏ-இ)

# தலாய் லாமா வருகையால் அச்சம் கொள்கின்றது சீனா

## இந்திய ஊடகம் தெரிவிப்பு

கொழும்பு. பெப்.4

பௌத்த பிக்குகளால் திபெத்திய ஆன்மிகத் தலைவர் தலாய் லாமாவுக்கு இலங்கைக்கு விடுக்கப்பட்ட அழைப்பு சீனா எதிர்ப்பு வெளியிடுவது அச்சம் கொள்வதையே எடுத்துக்காட்டுகிறது என இந்திய ஊடகமான 'த டிப்ளொமெட்' செய்தி வெளியிட்டுள்ளது. அந்தச் செய்தில் மேலும் உள்ளதாவது:-

இந்தியாவிலுள்ள புத்தகாயவுக்கு சென்றிருந்த இலங்கையின் பௌத்த பிக்குகள் நாட்டின் மீட்சிக்காக தலாய் லாமா இலங்கைக்கு வரவேண்டும் என அழைப்பு விடுத்தனர். இலங்கையின் சுற்றுலாத்துறையை முன்னேற்றவும், சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையிலும் அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. இந்த அழைப்பு சீனாவுக்கு பெரும் சீற்றத்தை ஏற்படுத்தியதால் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

கொழும்பிலுள்ள சீன இராஜதந்திரிகள் மல்வத்து பிரிவின் மகாநாயக்க தேரரை சந்தித்து தலாய் லாமாவின் இலங்கை பயணத்தை தடுக்க வேண்டும் என்று எதிப்பை வெளியிட்டுள்ளனர்.

இதன் காரணமாக சீன - இலங்கை உறவுகள் மிகவும் மோசமான முறையில் பாதிக்கப்படலாம் - வரலாற்று உறவுகள் சேதமடையலாம் எனத் தெரிவித்தனர். அழைப்பை திரும்பப் பெறாதுவிட்டால் கடனில் சிக்கியுள்ள இலங்கைக்கான சீனாவின் ஆதரவில் விரிசல் உண்டாகும் எனவும் சுட்டிக்காட்டினர். தலாய் லாமா இலங்கைப் பயணத்தால் சீனா அச்சம் கொண்டுள்ளது என்பதையே இது எடுத்துக்காட்டுகிறது - என்றுள்ளது.

சர்வதேச சமூகத்தின் முக்கியமான பௌத்த துறவியாக கருதப்படும் தலாய் லாமா திபெத் மீது நிகழ்த்தப்பட்ட சீனாவின் ஆக்கிரமிப்புக்குப் பின்னர் இந்தியாவின் இமாசல மாநிலத்தில் வசித்து வருகிறார். திபெத்தில் சீனாவின் ஆக்கிரமிப்பையும், அதன் அடக்குமுறை கொள்கைகளையும் கடுமையாக எதிர்த்து வருபவர் தலாய் லாமா என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)




75 ஆவது சுதந்திர தினம்
நிரந்தர சுதந்திரத்தை
உருவாக்கட்டும்

LIC
உங்கள் வாழ்க்கைக்கான உயிரோட்டம்

29/2, விசாகா வீதி, கொழும்பு 04, இலங்கை.
தொலைபேசி எண் : +94 2552277, +94 2553577-8, +94 2554411,
தொலைநகல் : +94 2590495,
www.liclanka.com


# அரசின் சதித் திட்டங்கள் அம்பலப்படுத்தப்படும்!

## வசந்த முதலிகே தெரிவிப்பு

கொழும்பு, பெப்.4

சிறையில் அடைத்து எங்களை கொலை செய்வதற்கு திட்டம் வகுக்கப்பட்டது. பல இடங்களுக்கு அழைத்தும் சென்றனர். இவை தொடர்பான அனைத்து விடயங்களையும் அம்பலப்படுத்துவோம் என்று பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே தெரிவித்தார்.

வசந்த முதலிகேவுக்கு எதிராக கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னெடுக்கப்பட்ட 3 வழக்குகளிலும் அவருக்குப் பிணை வழங்கப்பட்டுள்ளது.

அதன்பின்னர் நீதிமன்ற வளாகத்தில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாட்டு மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. மாறாக மக்கள்மீது வரிகள் சுமத்தப்பட்டுள்ளன. இந்த அரசின் முன் மண்டியிட நாம் தயாரில்லை. இது ஆரம்பம் மட்டுமே.

மக்கள் சக்தி என்னவென்பதை விரைவில் காட்டுவோம். எம்மை சிறையில் அடைத்து கொலை செய்வதற்கு அரசு முயற்சித்தது. அதற்காக வகுக்கப்பட்ட திட்டங்களை நாளை (இன்று) ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தி பெயர், விவரங்களுடன் அம்பலப்படுத்துவோம். எனது விடுதலைக்காக போராடிய அனைவருக்கும் நன்றிகள் - என்றார். (ஏ-44)

# புற்றுநோயாளர் நாளொன்றில் 46 பேர் சாவு; 105 பேர் அடையாளம்

## புற்றுநோய் பிரிவு பணிப்பாளர் தகவல்

கொழும்பு, பெப். 4

இலங்கையில் புற்றுநோய் காரணமாக தினமும் 46 பேர் உயிரிழக்கின்றனர். நாளொன்றுக்கு சராசரியாக 105 பேர் நோயாளர்களாக இனங்காணப் படுகின்றனர் என புற்றுநோய் பிரிவு பணிப்பாளர் மருத்துவர் இஷானி பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

சர்வதேச புற்றுநோய் தினம் நாளை சனிக்கிழமை கடைப்பிடிக்கப்படுவதையடுத்து அவர் இந்தத் தகவலை வெளியிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில், 2020ஆம் ஆண்டு 38,229 புதிய நோயாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டனர். அவர்களில் 20ஆயிரத்து 395 பெண்களும் 17ஆயிரத்து 384 ஆண்களும் புற்றுநோயால் பீடிக்கப்பட்டனர். இதில் 16 ஆயிரத்து 691 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை நாட்டில் புற்றுநோய்க்கான மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. உலக சுகாதார ஸ்தாபனத்தின் உதவியுடன் தேவையான மருந்து மக்கள் மாத்திரமே கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனினும் இவை கிடைக்கப்பெறுவதற்கு 6 மாத காலங்கள் எடுக்கும்.

அதேவேளை தேசிய புற்றுநோய் ஆராய்ச்சி நிறுவன மருத்துவ நிபுணர் மருத்துவர் பிரசாத் அபயசிங்க புற்றுநோய்க்கான கதிர்வீச்சு சிகிச்சை நிலைய தொழில்நுட்பவியலாளர்கள் பலர் வெளிநாட்டுக்கு பயிற்சிக்காக சென்றவர்கள் நாட்டுக்குத் திரும்பவில்லை. இது நாட்டுக்கு பெரும் குறைபாடு. அவர்களை நாட்டுக்கு அழைத்து வர அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார். (ச-6)

# விடையெழுதும் தாள் தர மறுத்த ஆசிரியர்!

## மாணவி பொலிஸில் முறைப்பாடு

கொழும்பு, பெப். 4

உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவியொருவர் பரீட்சைக்கான விடையெழுதும் தாள் கேட்டு தரமறுத்த ஆசிரியர் மீது பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

மாத்தளையிலுள்ள தேசிய பாடசாலையொன்றில் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவியே இவ்வாறு முறைப்பாடு செய்துள்ளார். கண்காணிப்பாளராக கடமையாற்றிய ஆசிரியையிடம் விடையெழுதுவதற்கு தாள் கேட்டபோது ஆசிரியர் அதனை தர மறுத்து இத்தனை விடையெழுதும் தாள் எதற்கு? என அதட்டினார்.

அதனால் விடைகளை மறந்து பரீட்சைக்குத் தோற்ற முடியவில்லை என மாணவி முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவமனையில் ஊழியர்கள் மோதல்

## ஒருவர் காயம்; ஒருவர் கைது

கொழும்பு, பெப். 4

கொழும்பு தேசிய மருத்துவமனையில் ஊழியர்களிடையே ஏற்பட்ட மோதலில் ஒருவர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

இலங்கை சுதந்திர பணியாளர்கள் சங்கம் மற்றும் தேசிய ஊழியர் சங்க தொழிற்சங்க உறுப்பினர்கள் இருவர் தேசிய மருத்துவமனையின் சங்க உறுப்பினர்கள் மீது கற்களால் வீசித் தாக்கியுள்ளனர். ஏனைய மருத்துவமனைகளின் சிறு ஊழியர்களும் மருத்துவமனைக்குள் பிரவேசித்தனர்.

அதன்போது வெளியிட மருத்துவமனையிலிருந்து வந்த மருத்துவமனைப் பணியாளர்களுக்கும் மருத்துவமனை பணிப்பெண்களுக்கும் இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டு மோதலாக மாறியது. அதில் சிற்றூழியர் ஒருவர் மற்றொரு சிற்றூழியரை தாக்கி காயப்படுத்தியுள்ளார்.

சம்பவ இடத்துக்கு விரைந்த மருதானை பொலிஸார் மோதலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததுடன் தாக்குதலில் ஈடுபட்ட சிற்றூழியரை கைதுசெய்தனர். (ச-இ)

## சுதந்திரதினத்துக்கு...

கொழும்பு, பெப். 4

சுதந்திரதினக் கொண்டாட்டங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து மருதானையில் நேற்றுப் பலர் போராட்டம் நடத்திய நிலையில், அந்தப் போராட்டத்தில் பொலிஸார் பலப்பிரயோகம் மேற்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 30 தொடக்கம் 50 வீதமானவர்கள் சுதந்திர தினக் கொண்டாட்டங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். இதனால், நேற்று மாலை தொடக்கம் அந்தப் பகுதியில் பதற்றம் ஏற்பட்டிருந்தது. இந்த நிலையிலேயே நேற்றுப் பின்னிரவு அவர்கள் மீது கண்ணீர்ப்புகை வீசியும், தடியடி நடத்தியும் பொலிஸார் அடாவடியில் ஈடுபட்டுள்ளனர். இதனால் அந்தப் பகுதியில் பதற்றநிலை நீடித்தது. (ம)


### இலவச ஆங்கில கணினி வகுப்புக்கள்

**பிரிவு 45**

- Diploma in English / Spoken English
- Diploma in ICT
- Diploma in Singalam
- Diploma in Political Science
- Diploma in Fisheries Science
- Diploma in Media
- Diploma in Psychology & Counselling
- Diploma in Health Care
- Diploma in Social Science

ஆரம்பம்
05.02.2023 10.00 AM

IPS Thirunelvely.
T.P:- 021 434 0229
076 685 2529



### இலவச கருத்தரங்கு (Arduino)Robotic

தரம்-05 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றிய மாணவர்களை கௌரவிக்கும் முகமாக முற்றிலும் இலவசமாக Arduino (Robotic) கருத்தரங்கு நாளை (05.02.2023) 09.00am - 11.00 am வரை நடைபெறவிருப்பதால் விரும்பியவர்கள் கலந்துகொள்ளலாம்.
(கலந்துகொள்பவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.) (மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள். பதிவுகளுக்கு முந்துங்கள்)

Victory 076 88 33 966
No.100, Manipay Road, Jaffna.(K.K.S. Road அருகில்)



### வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் அமைந்துள்ள பிரபல பெண்கள் விடுதிக்கு கீழ்வரும் வேலைவாய்ப்புகளுக்காக நேர்முகத்தேர்வு 06.07 - 02-2023, முற்பகல் 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

i) விடுதி மேற்பார்வையாளர் (பெண்)
O/L அல்லது A/L தகைமை
வயது 30-40 வயதிற்குட்பட்டவர்கள்.

iii) விடுதி பராமரிப்பாளர்கள் (பெண்)
வயது 30-40 வயதிற்குட்பட்டவர்கள்.

* அடையாள அட்டை (NIC) பிரதி சமர்ப்பித்தல் வேண்டும்.
* கவர்ச்சிகரமான சம்பளம்.

தொடர்புகளுக்கு: 076 378 4109



### வேலைவாய்ப்பு



யாழில் இயங்கிவரும் எமது நிறுவனத்திற்கு இரவு நேர (முழு நேரம் / பகுதிநேரம்) வெற்றிடங்களுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

**1). மெசின் மைண்டர்**
**2). உதவியாளர் (பழகவிரும்புவர்களும்) தேவை.**

ஆர்வமுள்ளவர்கள் (06.02.2023) திங்கட்கிழமை காலை 09.30 - 11.30 மற்றும் மாலை 05.30 - 07.30 மணிவரை நடைபெறும் நேர்முகத் தேர்விற்கு சமுகம் தரவும்.

**உதயன் பணிமனை**
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



உ
சிவமயம்

### ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபியில் அடியார்களுக்கு சிறப்பு அன்னதானம்

நயினையில் தைப்பூச விழா



நயினாதீவு அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் **05.02.2023 ஞாயிற்றுக்கிழமை தைப்பூச விழா** மிகவும் சிறப்பாக நடைபெறவுள்ளது. விசேட அபிஷேகங்களைத் தொடர்ந்து அம்பாள் திருமஞ்சத்தில் வீதியுலா வந்து அன்பர்களுக்கு அருள்பாலிப்பாள்.

அன்றைய தினம் நயினாதீவுக்கு வரும் மெய்யடியார்கள் அனைவருக்கும் பிரதான சாலையில் அமைந்துள்ள நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபையில் வழமைபோல் சிறப்பு அன்னதானம் வழங்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்பதனை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

நயினாதீவு - 02 (cs. 23265) (2.6) நிர்வாகம் அமுதசுரபி



### எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமம் மல்லாவி முல்லைத்தீவு

SOS CHILDREN'S VILLAGES SRI LANKA

எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமங்களானது பெற்றோர்களை இழந்த சிறுவர்களுக்கு பூரண பராமரிப்பை 136 சர்வதேச நாடுகளில் 71 வருடங்களாகவும் இலங்கையில் 41 வருடங்களாகவும் இயங்கி வருகின்ற அரச மத சார்பற்ற நிறுவனமாகும். இந்நிறுவனத்தில் பின் வரும் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

DFE இணைப்பாளர் / Coordinator – Direct family empowerment [DFE] ஆண்/பெண் 40 வயதுக்கு உட்பட்டோர்.

- அங்கீகரீக்கப்பட்ட நிறுவனமொன்றில் சமூகவியல் பட்டம் (Degree) அல்லது (Diploma) கற்கை நெறிச்சான்றிதழினை கொண்டிருப்பதோடு குறைந்தது ஒரு வருட / ஆறு மாத தொழில் சார் அனுபவத்தினை கொண்டிருத்தல் விரும்பத்தக்கது.
- சமூகம் சார் வெளிக்கள வேலைகளில் ஆர்வமும் ஊக்கமும் உள்ளவராகவும் சாரதி அனுமதிப்பத்திரத்தினை கட்டாயமாக கொண்டிருத்தல் வேண்டும்.
- கணினி அறிவு மற்றும் மின்னஞ்சல் வாயிலாக அறிக்கையிடும் ஆற்றல் கொண்டிருத்தல் வேண்டும்.
- சிங்களம் பேசக் கூடியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

இந்நிறுவனத்தில் சேவையாற்ற விரும்புவோர் தங்கள் விண்ணப்பங்களை தொலைபேசி இலக்கத்துடன் 20/02/2023 ம் திகதிக்கு முன்னர் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள எமது காரியாலய முகவரிக்கு அனுப்பி வைக்கவும். இப் பதவிகள் நிரந்தரமானதும் ஊழியர் சேமலாப நிதி நம்பிக்கை நிதியைக் கொண்டதுமாகும்.

**சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும். நேர்முகத்தேர்வுக்கான அழைப்பு தொலைபேசி மூலம் அறியத்தரப்படும்.**

'SOS Children's villages Sri Lanka is committed to promote and protect the children's rights and therefore, it is expected that every individual expected to join SOS Children's villages Sri Lanka under stand his/her responsibilities in protecting and keeping children always safe. The highest standards of selection recruitment and verification procedures will be applied for all employment opportunities with our organization including thorough cross – checking of references.'

தொடர்புகளுக்கு
**எஸ்ஓஎஸ் சமூகவலுவூட்டல் திட்டம்,**
**4 ம் ஒழுங்கை, மல்லாவி. முல்லைத்தீவு.**
**தொ.பே 0212283580, 0773188804**



### மரண அறிவித்தல்

தோற்றம் 13 . 12 . 1968



மறைவு 03 . 02 . 2023

**திருமதி பாலகிருஷ்ணன் புஸ்பலாதேவி**
**(யாழ்.கொக்குவில் நாமகள் தமிழ் கலவன் பாடசாலை ஆசிரியர்)**

காரைநகர், ராசாவின் தோட்டம், நாச்சிமார் கோவிலடியை பிறப்பிடமாகவும், 40/13, சீனியர் லேன், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பாலகிருஷ்ணன் புஸ்பலாதேவி நேற்று (03.02.2023) வெள்ளிக்கிழமை பிற்பகல் இறைபதம் எய்தினார்.

அன்னார் பாலகிருஷ்ணனின் (வர்த்தகர்-யாழ்ப்பாணம்) பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராசையா பூமணி தம்பதியரின் ஆசை புதல்வியும், காலஞ்சென்றவர்களான கருங்காலி, காரைநகரைச் சேர்ந்த கார்த்திகேசு தவமணி தம்பதியரின் பாசமிகு மருமகளும், சறோயாதேவி (கொழும்பு இந்துக்கல்லூரி, ஓய்வுநிலை ஆசிரியை), மகேந்திரன் (ரூபா பன்முக வர்த்தக நிலையம் - யாழ்ப்பாணம்), கௌரிதேவி (UK), இராசேந்திரன் (UK), பரமேஸ்வரி (ஆசிரியை-யாழ். வைத்தீஸ்வரா கல்லூரி), சிவசக்தி (அபிவிருத்தி உத்தியோகத்தர் வடமாகாண காணி ஆணையாளர் திணைக்களம், யாழ்ப்பாணம்), குகதாசன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற சற்குணராசா (கணக்காளர் - கொழும்பு), இராஜேஸ்வரி, விக்னேஸ்வரன் (UK), ஜெயரூபி (UK), பரமசிவம் (கொழும்பு- வர்த்தகர்), ஜோகராசா (பிரான்ஸ்), பாலசுப்பிரமணியம், காலஞ்சென்றவர்களான பாலராணி, பாலச்சந்திரன், பாலேந்திரன் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், கரிகஜன் (பிரான்ஸ்), தனிசிகா (கொழும்பு), மாதுரி (UK) ஆகியோரின் பாசமிகு சித்தியும், கரிகரசுதன் (யாழ் இந்து ஆரம்ப பாடசாலை மாணவன்), அபிதா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி மாணவி), அக்சியா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி மாணவி) ஆகியோரின் பாசமிகு பெரியம்மாவும், சாருகன், சருணியா (UK), சாருகேஸ் (UK) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் நாளை (05.02.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

40/13, சீனியர் லேன்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
கணவர் (பாலகிருஷ்ணன்)
077 953 4051
077 391 4443

(CS 23285) 1-6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழர்களுக்கு...

சிறிலங்காவின் சுதந்திரதினமான இன்றைய நாளை, தமிழர் தாயகத்தில் கரிநாள் என்று அறிவித்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களாலும் கிழக்குப்பல்கலைக்கழக மாணவர்களாலும் ஹர்த்தாலுக்கும் பேரணிக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இன்று தொடக்கம் எதிர்வரும் 7ஆம் திகதிவரை பேரணி இடம்பெறவுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலிருந்து பேரணி இன்று ஆரம்பமாகின்றது.

முதல்நாள் பேரணி முற்பகல் 10 மணிக்கு யாழ் பல்கலைக்கழகத்திலிருந்து ஆரம்பமாகி நாச்சிமார் கோவிலடியூடாக பிரதான தபால் அலுவலகம், தமிழாராய்ச்சி மண்டபம், மணிக்கூட்டுக் கோபுரம், மருத்துவமனை வீதி வழியாக கச்சேரியடியை வந்தடைந்து பின்னர் செம்மணியை சென்றடையும். செம்மணியிலிருந்து வாகனங்களில் பயணிக்கும் பேரணியானது நாவற்குழி, சாவகச்சேரி, கொடிகாமம், மிருசுவில், பளை, ஆனையிறவு, பரந்தன் ஊடாக கிளிநொச்சியை சென்றடைந்து முதலாம் நாளின் இறுதி நிகழ்வை இரணைமடுவில் நிறைவுசெய்யவுள்ளது.

தமிழ் மக்கள் மிகப் பேரெழுச்சியுடன் கூட்டாக தமிழ் மக்களின் அபிலாஷைகளான பொங்கு தமிழ் எழுச்சியினூடாக வலியுறுத்தப்பட்ட சுயநிர்ணய உரிமை, மரபுவழித் தாயகம், தமிழ்த் தேசியம் என்பவற்றை முன்னிறுத்தி முன்னெடுக்கும் இந்தப் பேரணியை மேலும் வலுப்படுத்துவதற்கு வடக்கு கிழக்குத் தழுவிய வர்த்தக சமூகத்தினரையும், கடற்றொழிலாளர்கள், தனியார் மற்றும் அரச பேருந்து உட்பட அனைத்து தொழிற் சங்கங்களையும் அணிதிரளுமாறு மாணவர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (ம-125)

## பல்கலை....

வர்கள், கண்டனப் பேரணியொன்றையும் இன்று தொடக்கம் எதிர்வரும் 7ஆம்திகதிவரைமுன்னெடுக்கின்றனர். இந்தப் பேரணிக்கு ஆதரவு வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சிறீதரன்.

சுதந்திரதினத்தை முன்னிட்டு மட்டக்களப்பில் தமிழரசுக் கட்சியால் பேரணிக்கும் போராட்டத்துக்கும் தனியான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனின் இந்த அறிவிப்பு தமிழரசுக் கட்சிக்குள் பிளவு ஏற்பட்டுள்ளதா? என்ற கேள்வியையும் ஏற்படுத்தியுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களின் பேரணிக்கு ஆதரவு தெரிவித்து அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில், சிறீதரன் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

எமது இனத்தின் கனவுகளைச் சுமந்த இலட்சியப் பயணத்தின் நீட்சிக்கான படிமமாக, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள், கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களோடு இணைந்து முன்னெடுத்திருக்கும் எழுச்சிப் பேரணியானது நாளை (இன்று) முற்பகல் 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழகத்தில் ஆரம்பித்து எதிர்வரும் 7ஆம் திகதி மட்டுநகரைச் சென்றடையவுள்ளது. எமது மாணவர்களின் இந்த முன்னெடுப்புக்கு சமூக, மத மற்றும் கட்சி பேதங்களற்று பேராதரவு வழங்க வேண்டிய காலக்கடமை எம் எல்லோருக்கும் உள்ளது. அதை உணர்ந்து, தமிழ்த் தேசியப் பற்றுறுதிமிக்க எமது மக்கள் அனைவரையும் இந்த உணர்வெழுச்சிப் பேரணியில் இணைந்துகொள்ளுமாறு பகிரங்கமாக அழைப்பு விடுக்கிறேன் - என்றுள்ளது. (அ-ம-20)

## ஹர்த்தாலும்...

ளாலும் சிவில் சமூக அமைப்பினர் மற்றும் மக்கள் பிரதிநிதி களின் ஆலோசனைகளுக்கு அமைய முன்னெடுக்கப்பட்டுள்ள இந்தப் பேரணியும் ஹர்த்தாலும் வெற்றிபெற வேண்டும். அதற்கு அனைத்து மக்களும் தமது முழுமையான ஒத்துழைப்பை வழங்கவேண்டும் - இவ்வாறு தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினரான க.வி.விக்னேஸ்வரன். இதுதொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி சிங்களப் பெரும்பான்மையினருக்கு சுதந்திர தினமாக அமையினும் வடக்கு- கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்களுக்கு அது சுதந்திரமற்ற, உரிமைகள் அற்ற, சிங்கள ஏகாதிபத்தியத்துக்கு அடிமைப்பட்டிருக்கும் ஒரு நாளாகவே இருக்கின்றது.

எனவேதான் யாழ். பல்கலைக்கழக மாணவ ஒன்றியமும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களும் ஒன்றிணைந்து குறித்த நாளை கரிநாளாக அடையாளப்படுத்தியுள்ளனர். இவ்வாறு பிரகடனப்படுத்த முன்னர் அவர்கள் மக்கள் பிரதிநிதிகள், சிவில் சமூகத்தினர், மதத் தலைவர்கள் போன்றோருடன் கலந்துரையாடிய பிறகே இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டனர்.

பெப்ரவரி 4ஆம் திகதியன்று வடக்கு-கிழக்கு தழுவிய வர்த்தக சமூகத்தினர், கடற்றொழிலாளர்கள், தனியார் மற்றும் அரச பேருந்து உட்பட அனைத்து தொழிற்சங்கங்களும் தொழில் புறக்கணிப்பிலும் முழுமையான கடையடைப்பிலும் ஈடுபடவுள்ளனர். எமது மனோநிலையை மன ஏக்கத்தை உலகுக்கு வெளிப்படுத்த இது ஒரு நல்ல சந்தர்ப்பமாக அமைந்துள்ளது.

பிரிட்டிஷாரின் ஆதிக்கத்தினுள் இருந்து சிங்களப் பெரும்பான்மையினரின் ஆதிக்கத்தினுள் இந்நாடு 1948ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4ஆம் திகதியன்று சென்றமையை சுட்டிக்காட்டும் நாளாக இந்த நாள் அமைகின்றது.

ஒற்றையாட்சி மூலம் சிங்களப் பெரும்பான்மையினர் பெற்ற அரசியல் ஆதிக்கத்தை கடந்த 75 ஆண்டுகளாக சிங்கள அரசியல்வாதிகள் கட்டிக்காத்து வருகின்றனர். தந்திரமாக அவர்கள் பெற்றுக்கொண்ட ஒற்றையாட்சி முறையில் மாற்றத்தை ஏற்படுத்தி நாட்டில் வாழும் தமிழ் மக்கள் என்று பூரண அதிகாரப் பகிர்வைப்பெற என்று சிங்கள மக்கள் அனுமதிக்கின்றார்களோ அன்றே தமிழ் மக்களின் விடிவுநாள். அதுவரையில் வருடந்தோறும் பெப்ரவரி 4ஆம் திகதி என்ற கரிநாள் வந்து போய்க்கொண்டிருக்கும். நாமும் அன்றையதினம் எமது மனோநிலையை வெளிப்படுத்திக்கொண்டேயிருப்போம் - என்றுள்ளது. (அ-ம)

## சுதந்திரதின...

வடக்கு அபிவிருத்திக்குப் பொறுப்பான மேலதிக செயலாளர் இளங்கோவன் தெரிவித்தார். சுதந்திரதினம் தொடர்பான கூட்டத்தில் நேற்றுக் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இளங்கோவன் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் 75 ஆவது சுதந்திரதினக் கொண்டாட்டங்களின் முக்கியமான நிகழ்வு நாளையதினம் கொழும்பிலும், எதிர்வரும் 11ஆம் திகதி யாழ்ப்பாணத்திலும் முன்னெடுக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 11ஆம் திகதி காலை இந்தியாவால் அமைக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணம் கலாசார மண்டபத்தை முறையாகக் கையளித்து அதனைச் செயற்படுத்து வதற்காக அமைக்கப்பட்ட குழு அறிமுகம் செய்து வைக்கப்படவுள்ளது. அதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதைத்தொடர்ந்து அன்றையதினம் மாலை நிகழ்வாக ஐந்து மாவட்டங்களும் தங்களுடைய மாவட்டத்தினுடைய தனித்துவமான பிரசித்திபெற்ற கலை அம்சங்களை உள்ளடங்கிய வாகன பேரணி இடம்பெறவுள்ளது. இந்திய கலாசார மையத்திலிருந்து ஆரம்பமாகும் இந்தப் பேரணி யாழ்ப்பாணம் நகர்வரை சென்று அங்கு நிறைவடையவுள்ளது. அதைத் தொடர்ந்து கலாசார இசை நிகழ்வுகளுக்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன - என்றார். (ம)

## வலி.வடக்கில்...

களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

கடற்படை மற்றும் இராணுவத்தின் பிடியில் இருந்த ஜே/234, ஜே/246, ஜே/245 ஆகிய கிராமஅலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த காணிகளே நேற்று விடுவிக்கப்பட்டுள்ளன. யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதியால், யாழ்ப்பாணம் மாவட்டச் செயலரிடம் விடுவிக்கப்பட்ட காணிகளுக்கான பத்திரங்கள் வழங்கப்பட்டன. குறித்த நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர்களான அங்கஜன் இராமநாதன், எம்.ஏ.சுமந்திரன், வடமாகாண சபையின் அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம், யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர், வடக்கு மாகாண பிரதம செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ-ம-27)

## பலாலி...

கப்பட்டது. இதையடுத்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வலி. வடக்கில் 108 ஏக்கர் நிலப்பகுதி இன்று (நேற்று) விடுவிக்கப்பட்டுள்ளது. அடுத்த சில வாரங்களில் வலி. வடக்கின் பிறிதொருபகுதி அதாவது பலாலி கிழக்குப் பகுதி விடுவிக்கப்படும். மக்களின் விவசாய நிலங்களே அடுத்தகட்டமாக விடுவிக்கப்படவுள்ளன - என்றார். (அ-ம)

## காலி....

பகுதிக்குள் நுழைவதற்கு இலங்கை ஆசிரியர் சங்க பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட 27 பேருக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

காலிமுகத்திடலில் கடந்த சில தினங்களாகவே பொலிஸாரும் இராணுவத்தினரும் குவிக்கப்பட்டு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது. ரோந்து நடவடிக்கைகளும் அங்கு இடம்பெற்று வருகின்றன. இந்த நிலையிலேயே காலிமுகத்திடலுக்குள் நுழைவதற்கு இலங்கை ஆசிரியர் சங்க பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட 27 பேருக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன், பேரணிகள் மற்றும் ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்கும் அந்தப் பகுதியில் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மருதானை எல்பின்ஸ்டன் தியேட்டர் பகுதியில் சுதந்திர தினத்துக்கு எதிராக நேற்றுப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. அந்தப் போராட்டம் மேலும் பெரிதடையாமல் இருப்பதற்காக பொலிஸார் குவிக்கப்பட்டு கண்காணிப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. (அ-ம)

## ஆயிரக்கணக்கான...

தமது கவலையைத் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த இருநாள்களாக தொடர்ச்சியாகப் பெய்த கனமழையால் முத்தையன்கட்டு நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் உள்ள 24 அடி கொள்ளளவு உள்ள முத்துஐயன்கட்டுக் குளத்தின் இரண்டு வான்கதவுகள் திறந்துவிடப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில், உடையார் கட்டுக் குளம், விசுவமடுக்குளம், கணுக்கேணிக் குளம், மதவாளசிங்கன் குளம், தண்ணிமுறிப்புக் குளம், மருதமடுக்குளம், தட்டையர்மலைக் குளம் ஆகிய குளங்கள் வான்பாய்கின்றன. வவுனிக்குள நீர்பாசனத் திணைக்க ளத்தின் கீழுள்ள ஐயன்கன் குளம், அம்பலப்பெருமாள்குளம், கோட்டைகட்டியகுளம், தேறாங்கண்டல்குளம் ஆகிய குளங்களும் வான்பாய்கின்றன. முத்தையன்கட்டுக்குளத்தின் வான்கதவுகள் திறந்துவிடப்பட்டு வான்பாய்வதால் பேராறு பெருக்கெடுத்து ஓடுகின்றது. பேராற்றினை அண்டிய பகுதிகளில் உள்ள வயல் நிலங்கள் அனைத்தும் அறுவடைக்குத் தயாராக இருந்த நிலையில், தற்போது வெள்ள நீர் சூழ்ந்து அழிவடைந்துள்ளன.

புதுக்குடியிருப்பு கிழக்கு கமக்கார அமைப்பு மற்றும் மல்லிக்கைத்தீவு கமக்கார அமைப்பின் கீழுள்ள சுமார் 500 ஏக்கர் வரையான நெற்செய்கை நீரில் மூழ்கி அழிவடைந்துள்ளது. அதேபோல் தண்ணிமுறிப்புக் குளத்தின் வான்கதவுகள் திறந்துவிடப்பட்டதால் அதனை அண்டிய அறுவடைக்கு தயாரான நிலையில் உள்ள சுமார் ஆயிரம் ஏக்கர் நெற்பயிர்களும் நாசமாகியுள்ளன. வவுனியாவில் நேற்றுமுன்தினம் இரவும், பின்னிரவும் கடும்மழை கொட்டித்தீர்த்ததால் அங்கும் அநேகமான குளங்கள் வான்பாய்வதுடன், பயிரழிவுகளும் ஏற்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிலும் மழையால் கடுமையான பயிரழிவுகள் ஏற்பட்டுள்ளன. (அ-ச-19)

## நகைக்கடை....

மீட்கப்பட்டவராவார்.

புதுக்குடியிருப்பு மல்லிகைத்தீவுப் பகுதியில் அமைந்துள்ள காட்டு அந்தோனியார் கோவிலுக்குள் இருந்து அவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. இறப்புத் தொடர்பில் புதுக்குடியிருப்புப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-19)

## 2 உறுப்பினர்கள்...

நடைமுறைக்கு வரும் வகையில் பதவிகளில் இருந்து விலகியுள்ளனர்.

பிரதித்தலைவர் உதேனி விக்கிரமசிங்க, ஆணைக்குழுவின் விசேட தொடர்பாளர் மொகான் சமரநாயக்க ஆகிய இருவருமே தமது பதவிகளில் இருந்து விலகியுள்ளனர். இவர்களிருவருக்கும் எதிராகக் குற்றப்பத்திரம் வழங்கப்பட்டதைத் தொடர்ந்தே இவர்கள் தமது பதவிகளில் இருந்து விலகியுள்ளனர்.

மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பாக மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகரவுக்கும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கும் இடையே எழுந்த கருத்து முரண்பாடே இந்தப் பதவிவிலகல்களுக்குக் காரணம் என்று சொல்லப்படுகின்றது. பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்கவுக்கு எதிராகக் குற்றப்பத்தி ரிகை தாக்கல்செய்து அவரைப் பதவிநீக்கம் செய்யப்போவதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் அண்மையில் எச்சரித்திருந்தார். எனினும், அவருக்கு எதிராகக் குற்றப்பத்திரம் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

© 2000 Agfa-Gevaert N.V.

# கரிநாள் பேரணிக்காக விரிவுரை புறக்கணிப்பு

## யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 4 சிறிலங்காவின் சுதந்திர தினத்தை கரிநாளாக அறிவித்து, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைமையில், முன்னெடுக்கப்படும் பேரணியில் கலந்து கொண்டு அதற்கு வலுச் சேர்ப்பதற்காக எதிர்வரும் 7ஆம் திகதிவரை அனைத்து விரிவுரைகளையும் புறக்கணிப்பதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கையிட்டுள்ளது.

துணைவேந்தர், அனைத்து பீடாதிபதிகள், ஆசிரியர் சங்கத்தினர், மாணவர் ஒன்றியத் தலைவர்கள் என அனைவருக்கும் இந்த விடயத்தை பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரியப்படுத்தியுள்ளது. (ம)


## கட்டடம் வாடகைக்கு

2400 சதுரஅடி 2 ஆம் மாடி கட்டடம்
206/2. ஸ்ரான்லி றோட் யாழ்ப்பாணத்தில் உள்ளது
(CDB வங்கிக்கு மேல்)
தொடர்பு: 077 360 9005

தரமான பொருட்களை நியாயமான விலைகளில் உங்களுக்கு தருவதில் என்றும் முன்னணியில் திகழ்வது...

## உழவர் அரிசிக்கடை

மருதனார்மடம் சந்தை

**மலிவு விற்பனை**

உழவர்-ஆட்டக்காரி அரிசி 10 கிலோ வாங்குவோர்க்கு 1 கிலோ அரிசி இலவசம்

புதிய விலைகள்...
1 Kg உழவர் - ஆட்டக்காரி அரிசி Rs.180.00/=
10 Kg உழவர் - ஆட்டக்காரி அரிசி Rs.1800.00/=
5 Kg கீரி சம்பா Rs.1240.00/=
1 Kg ஆட்டக்காரி அரிசி தீட்டல் Rs.180.00/=
1 Kg சிவப்பு நாடு அரிசி தீட்டல் Rs.170.00/=

இன்று முதல்...
1 Litter சுத்தமான சட்டித் தயிர் (எருமை பால்) Rs.350.00/- (வெள்ளி,சனி, ஞாயிறு, திங்கட்கிழமை ஆகிய தினங்களில் விற்கப்படும்.)

உழவர் அரிசிக்கடை மருதனார்மடம் (சந்தை உள்பக்கத்தில்)
Open Daily:06:00-14:00
தொடர்பு: 076 287 81 57

## பராமரிப்பாளர் தேவை

யாழ்ப்பாணத்தில் வயதான பெண் ஒருவரை. வீட்டில் தங்கியிருந்து தொடர்ச்சியாகப் பராமரிப்பதற்கும். சமையல் வேலைகளைச் செய்வதற்கும் ஒருவர் தேவை. உணவு மற்றும் தங்குமிடம் இலவசம். அனுபவத்தைப் பொறுத்து சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (ரூபா 50.000 இற்கும் மேல்)
தொடர்பு: 077 120 9998

## வீட்டுப் பணிப்பெண் தேவை

கல்வியங்காட்டுப் பகுதியில் 5 பேர் கொண்ட குடும்பத்திற்கு (வைத்தியர்) வீட்டில் பகுதி நேர வேலை செய்ய 40 -65 வயதுக்குட்பட்ட பணிப்பெண் ஒருவர் தேவை.
சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.
(CS/23277)4.6 077 712 4211

## மணப்பெண் தேவை

01. கொடிகாமம் - Jaffna town இந்து கௌரகுடும்பம் (V). 1980. ஆயிலியம். Lawyer, Australiya citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
02. யாழ்ப்பாணம். இந்து. கௌரவகுலம் (V). 1988. ரோகினி. Senior Managment Accountant, Australia Citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
03. வடமராட்சி. இந்து. கௌரவகுலம் (V). 1974. சித்திரை. Machine Maintanancy. Australiya Citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
04. அளவெட்டி . இந்து . கௌரவகுலம் (V). 1983. பூரட்டாதி. MSc.,Quantity Sarueyer, Australiya Citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
05. காரைநகர். இந்து. கௌரவகுலம் (V). 1992. மகம். Software Engineer, Australiya Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
06. காரைநகர். இந்து. கௌரவகுலம். (V). 1991. பூரட்டாதி. BSc in civil Engineering Australiya Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
07. சாவகச்சேரி. இந்து. கௌரவகுலம் (V). 1992. சதயம். MBBS Doctor, Vegetarian மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. மச்சம் உண்பவர்களும் பரவாயில்லை.
08. ஆனைப்பந்தி. இந்து கௌரவகுலம் (V). 1994. உத்திரட்டாதி. Lawyer, Australiya Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
09. இணுவில். இந்து. கௌரவகுலம் (V). 1994. திருவோணம். ACCA, BIT, MSc, Australiya Citizen, UK citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
10. புலோலி. இந்து. கௌரவகுலம் (V). 1985. உத்திராடம். MBA, MSc, BSc Engineering, LLM, UK, Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
11. நயினாதீவு. இந்து கௌரவகுலம் (V). 1995. விசாகம். MSc in Engineering, UK citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
12. துன்னாலை. இந்து. கௌரவகுலம் (V). 1984. மூலம். Master of Business Administration, Accountant, UK, citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.

தொடர்புகளுக்கு- S.Sharma J.P Astrologer
Whatsapp - 077 803 8193
Phone - 077 539 3728

## அறிவாலயம்

(K.K.S Road, தெல்லிப்பளை)

**2023 புதிய கல்வி ஆண்டு**

- தரம் 06 மாணவர்களுக்கான அனுமதிகள்
- தரம் 03 - 11 வரையான புதிய மாணவர் அனுமதி
- A/L 2023, 2024 - பிரிவுகளுக்கான குழு வகுப்புக்கள் (கணித. உயிரியல். தொழில்நுட்ப. கலைப்பிரிவுகள்)

**தொழில்புரிவோர், கல்வி கற்போருக்கான**

- சிங்கள வகுப்புக்கள்
- Spoken English Classes
- ICT வகுப்புக்கள்

அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
ஆரம்பம் 05.02.2023 மாலை 3.00 மணி
தொடர்பு : 077 828 0900
- நிர்வாகி -

## அகரம் உயர் நிலைக் கல்லூரி

AHARAM HIGH STANDARD COLLEGE
மல்லாகம் தரம் - 06 கொக்குவில்
தமிழ் / ஆங்கில மொழிமூல மாணவர்களிற்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
"அகரம் எம் தேசக்குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்" நிர்வாகி

## Science (விஞ்ஞானம்)

பிரபல பாடசாலையின் விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியரினால் தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலத்தில் தனி அல்லது குழு வகுப்புக்களாகக் கற்பிக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 076 778 1442

## PHYSICS A/L 2023 & 2024

தனிப்பட்ட / குழு வகுப்புக்கள்
வீடு வந்து கற்பிக்கப்படும். (Home Visit))
- Past papers
- F.W.C. Papers

070 366 0951 (யாழ் நகர்ப்பகுதி)


விடுவிக்கப்பட்ட...

வீடுகளில் திருடர்கள் கைவரிசை காட்டத் தொடங்கியுள்ளனர். இதையடுத்து அந்தப் பகுதியில் பொலிஸ் பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது.

பலாலி வடக்கில் நேற்று 108 ஏக்கர் நிலப்பரப்பு விடுவிக்கப்பட்டது. விடுவிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள வீடுகளின் கதவுகள், நிலைகள், ஜன்னல்கள் மற்றும் இதர பொருள்களை திருடர்கள் களவாடும் சம்பவங்கள் நேற்றையதினமே இடம்பெற்றுள்ளன. இது தொடர்பில் பொலிஸாரின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டதை அடுத்து அங்கு பொலிஸ் பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது. (அ-ம)


## குழாய் பொருத்துநருக்கான (Plumber) விண்ணப்பம்கோரல்

இலங்கை ஜேர்மன் பயிற்சி நிறுவனத்தில் குழாய் பொருத்துநருக்கான வெற்றிடம் காணப்படுகின்றது.
எனவே இவ் வெற்றிடத்தை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்:**

1. NVQ Level - 4 குழாய் பொருத்துநர் (Plumber) சான்றிதழ்
2. ஒரு வருட கால தொழில் அனுபவம் (1Year Experience).
3. வயது எல்லை 18 இலிருந்து 36 வரை

**விண்ணப்ப முடிவு திகதி: 04.03.2023**

தகைமையுள்ள விண்ணப்பதாரிகள் **பணிப்பாளர் / அதிபர், இலங்கை ஜேர்மன் பயிற்சி நிறுவனம், அறிவியல்நகர், கிளிநொச்சி** என்ற முகவரிக்கு விண்ணப்பத்தை சான்றிதழ் பிரதிகளுடன் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்

**பணிப்பாளர் / அதிபர்**

## Online Mathematics and Computer Science Tutoring

By Canadian Trained Teacher in Both Tamil and English Medium

**Taught By : Mr. Nanthivarman**

Credentials : BSc, State University of New York Institute of Technology
BEd, Ontario Institute For Studies In Education
MMT (Pending), University of Waterloo
OCT (Ontario Certified Teacher)

**O/L Mathematics**
**G.C.E A/L Combined Mathematics**
**Programming in Python / Java / C++**

- State of the Art Learning Management Platform
- Readily Available Digital Handouts & Notes
- Ongoing Assessments
- Affordable Tuition Fees
- Free Consultation for Higher Education in Canada.

visit www.mathemperor.ca
for further details:
Whats App contact :
+1416 821 9591


யாழ். வரணி, இயற்றாலையைப் பிறப்பிடமாகவும், பருத்தித்துறை வீதி, குடமியன், வரணியை வசிப்பிடமாகவும் கொண்ட

# கந்தையா குழந்தை அவர்களின் முதலாம் ஆண்டு நினைவுநாள்



எங்கள் குடும்பத்தின் குல விளக்கே
எம்மை விட்டுத் தொலைதூரம் சென்றுவிட்டீர்
ஆண்டொன்று ஆனதுவே – ஆனால்
எம்மால் நம்ப முடியவில்லை – ஆம்
ஓராண்டென்ன ஓராயிரம் ஆண்டுகள்
கடந்தாலும் எம்மால் மறக்க முடியாது
உங்கள் நினைவுகளை – அம்மம்மா
உம் துன்பம் கூட துச்சமென எண்ணி

எம்மை எல்லாம் சிறப்புடன் சீர்தூக்கி
தானைக்கொரு தலைவியாய்
பசி தூக்கம் பாராமல் துணிவுடன்
உழைத்த எம் பெருமாட்டி நீங்கள்

இன்று நிம்மதியாய் உறங்குகின்றீர் – ஆனால்
எங்கள் உதிரங்களில் உங்கள்
நினைவுகள் அன்றும் இன்றும்
என்றென்றும் உறைந்திருக்கும்.

இன்று நிம்மதியான உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.
உங்கள் திருவடியில் எங்கள் சிரம்தாழ்த்தி வணங்குகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நினைவுகளுடன்.....
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.02.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.